1971 அக்டோபர் 21]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு அப்படி எதுவும் தகவல் வரவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, சில ஓட்டல்களில் ஒரு கப் காப்பி 50 பைசா, 75 பைசா என்று விற்கப்படுகிறதே, அதற்கு ஓர் உச்ச வரம்பை நிர்ணயிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 'எக்ஸ்பிரஸ் காபி' என்பது 75 பைசா என்று விற்கப்படுகிறது. ஓட்டல்களை 'ஏ', 'பி', 'சி' என்று தரம் பிரித்து விடுங்கள், 'ஏ' ஓட்டலில் காபி இன்ன விலை என்று போட்டு விடுங்கள் 'பி' ஓட்டலில் காபி இன்ன விலை என்று போட்டு விடுங்கள் என்று ஓட்டல் அதிபர்களிடத்தில் சொல்லியிருக்கிறோம். இந்த யோசனையைப் பரிசீலித்துச் சொல்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

Export of handloom goods

* 7 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the handloom industry has increased the export of its goods in the year 1970–71; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 1970–71-ஆம் ஆண்டில் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்தது குறித்த திட்டவட்டமான புள்ளி விவரங்கள் உடனே கிடைக்கவில்லை. ஆனால், கைத்தறித் துணிகள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுவால் எதிர்பார்க்கப்படும் ஏற்றுமதிப் புள்ளி விவரங்களிலிருந்து 1970-ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணிகளின் மதிப்பு ரூ. 2,654.66 லட்சமாக இருக்குமெனத் தெரிய வருகிறது. ஆனால், 1969-ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணி ரூ. 2,607.30 லட்சம் ஆகும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, தரம் குறைந்த (sub-standard) பொருள்களை ஏற்றுமதி செய்யாமல் இருக்க, தகுந்த நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்யும்போது சில தவறுகள் நடந்து வருகின்றன. தரம் குறைந்ததாக இருக்கிறது என்ற குறையைச் சொல்கிறார்கள். இங்கே இருக்கின்ற ரகம் ஒன்று, அனுப்புகின்ற ரகம் வேறு ஒன்றாக இருக்கின்றது என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது என்று ஏற்றுமதியாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இதுகுறித்து மத்திய அரசிடமும் கூறியிருக்கிறோம். மத்திய அரசும் இதைக் கவனிக்கும்.

Thiru K. M. SUBRAMANIAM : Do these figures pertain to the All-India export or export out of Tamil Nadu production alone?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில்தான் என்னிடம் குறிப்புகள் இருக்கின்றன. 'ஆல் இண்டியா ஃபிகர்' என்னிடத்தில் இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, பிளீடிங் மெட்ராஸ் போன்ற சில ரக துணிகள் தேக்கமடைந்திருப்பதற்குக் காரணம் தரக் குறைவுதான் என்று சொல்லப்படுகிறது. அந்தக் குறைபாட்டைப் போக்கி, அதை அபிவிருத்தி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ? பவானி பெட்ஷீட் என்பது அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும் பேஷனாக இருக்கிறது. அதற்கு இப்போது நல்ல கிராக்கி இருக்கிறது. அதை அதிக அளவில் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, வண்ணம் மாறும் துணிக்கு பல ஆண்டுகளாக நல்ல கிராக்கி இருந்தது. ஜப்பானியத் துணி போட்டிக்கு வந்த காரணத்தால், அந்த ரகத்திற்கு கிராக்கி குறைந்திருக்கிறது. எவ்வப்போது, எந்தெந்த துணிகளுக்கு மற்ற நாடுகளிலே கிராக்கி இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அதற்குத் தகுந்தாற்போல் துணிகளை ஏற்றுமதி செய்யவேண்டும் என்று ஏற்றுமதியாளர்களுக்குக் கூறியிருக்கிறோம். இதை எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சிலும் கவனிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, நமது தொழில் அமைச்சர் அவர்கள் உலக சுற்றுப் பிரயாணம் செய்தபோது, தமிழகத்தின் கைத்தறித் துணியை அதிகமான அளவில் விற்பனை செய்வதற்கு எந்த நாடுகளோடாவது பேச்சு வார்த்தை நடத்தினரா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஜப்பான் நாட்டிலே நம்முடைய அதிகாரிகள் யார் யாரிடமிருந்து துணிகளை வரவழைக்க வேண்டுமென்று பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். சில ரகங்களை மாநிலச் சங்கத்திடமிருந்தே வரவழைக்க வேண்டும். தனியார்களிடத்திலிருந்து வாங்குகின்றபோது சில சமயங்களில் தவறுகள் ஏற்படுகின்றன. ஆகவே ஏற்றுமதி செய்யப்படுகின்ற ரகங்கள் மாநிலச் சங்கத்திடமிருந்து வரவழைக்க வேண்டும். மாநிலச் சங்கம் அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா என்பதையும் பரிசீலித்து வருகிறோம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு பிளீடிங் மெட்ராஸ் போன்ற துணிகளை அனுப்பும்போது, தேவைக்கு அதிகமான, அதாவது டிமாண்டைவிட அதிகமாகத் துணிகளை அனுப்பியதன் காரணமாக அந்தத் துணிகளுக்கு இருந்த கிராக்கி குறைந்துவிட்டது என்றும், ஜப்பான் போன்ற நாடுகள் அதே ரக துணியைத் தயாரித்து விட்டார்கள் என்ற காரணத்தினால் நமது ஏற்றுமதி குறைந்துவிட்டது என்றும் சொல்லப்படுகிறதே, இது உண்மையா ? வெளிநாடுகளுக்கு எந்த அளவிற்குத் தேவையோ, அந்த அளவிற்கு நாம் ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

1971 அக்டோபர் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஜப்பான் நாடு அம்மாதிரியான துணியை உற்பத்தி செய்து போட்டிக்கு வந்தது உண்மை. வெளிநாடுகளில் எந்த அளவிற்குத் தேவை என்பதை அவர்கள் கேட்டதற்குப் பின்னுல்தான் நாம் ஏற்றுமதி செய்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, பிளீடிங் மெட்ராஸ் ஏற்றுமதி குறைந்ததற்குக் காரணம் தரக் குறைவான துணியை ஏற்றுமதி செய்ததுதான். தரக்குறைவான துணிகளை ஏற்றுமதி செய்வதைத் தடை செய்வதற்கு இப்போது இருக்கின்ற கவுன்சில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? வெளிநாடு களில் பட்டுச் சேலைகளுக்கும் அதிகமான கிராக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா ? ஒரு ஆண்டுக்கு எவ்வளவு அனுப்புகிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பட்டுச் சேலை என்பதாக இல்லை. 'சில்க் ஃபேப்ரிக்ஸ்' என்றுதான் இருக் கிறது. 1,348 லட்சம் ரூபாய்க்கு ஏற்றுமதியாகின்றது. தரம் குறைந்துவிட்டது என்று சொல்லும் கருத்து பரிசீலிக்கப்பட வேண்டிய கருத்து. மாநில அரசின் சார்பில் இதைக் கூறுகிறோம். எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில் இதில் அக்கறை எடுத்துக் கொள்வார்கள். தரக்குறைவு ஏற்றுமதியைப் பாதிக்கும் என்ற நல்ல கருத்தை அவர்களும் நினைவில் கொள்வார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே. கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியின் பொறுப்பை தனி நபர்களிடத்தில் விட்டதன் காரணமாக தரக் குறைவாக போய்விட்டது என்பது அரசுக்குத் தெரியும். உற்பத்தியாளர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்து, நல்ல ரகங்களை உற்பத்தி செய்து அரசாங்கம் கொள் முதல் செய்து, கையிருப்பில் வைத்துக்கொண்டு வியாபாரிகளுக்குத் தருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, எல்லா தனியார்களும் தவறு செய்வதில்லை. நல்ல ரகங்களை அனுப்பி நல்ல பெயர் பெற்றவர்களும் இருக்கிறார்கள். சிலர் தவறு செய்கி றார்கள். தவறு செய்வதைத் தடுப்பது நல்லது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, 'பிளீடிங் மெட்ராஸ்' என்பதை 'பிளீடிங் தமிழ் நாடு' என்று மாற்றுவீர் களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'நாட் ஆன்சரிங்'

(விடை இல்லை).

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நம் மாநிலச் சங்கம் துணிகளை அனுப்பினால் ஜப்பானில் வாங்கிக் கொள்வதாகச் சொன்னார்கள். பல கூட்டுறவுச் சங்கங்களிலும் துணி தேக்கம் அடைந்திருக்கிறது. ஆகவே, எந்தத் துணி, எந்த ரகம் தேவை என்பதைக் கண்டறிந்து மாநிலச் சங்கம் பிரதம சங்கங்களுக்கு

தகவல் கொடுத்து. அதை அனுப்புவதற்கு, ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் போதிய முயற்சி எடுக்கப்படுகிறது இந்த மாநில அரசாங்கத்தால்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, தரக் குறைவு இருப்பதால் ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே. நமது அரசு தீவிரமாக முயற்சி செய்து மத்திய அரசுடன் ஆலோசனை செய்து, கலந்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள என்னென்ன முயற்சிகளைச் செய்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சிலில் மத்திய அரசினரும் தனி நபர்களும் இருக்கிறார்கள். வெளியில் உள்ளவர்களுடைய கருத்துக்களையும் திரட்டி, நல்ல முயற்சி செய்வார்கள்.

திருப்பூர் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கம்

* 8 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தில் நடந்துள்ள முறைகேடுகள் பற்றி 29—3—1968-ம் தேதி அமைச்சர் அவர்கட்கு, திருப்பூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து புகார் கடிதம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) முன்னாள் கணக்கராகிய திரு. சிவலிங்கம், சங்க உறுப்பினர்களுக்குச் சங்கம் திருப்பிக் கொடுக்க வேண்டிய சந்தாத் தொகைக்காக பொய்க் கைசாத்துக்களைத் தயாரித்ததன் மூலம், சங்க நிதியிலிருந்து ரூ. 839.90 கையாடல் செய்தார். இந்தத் தொகை முன்னாள் கணக்கரிடமிருந்து வசூலிக்கப்பட்டது. அவர் மீது குற்ற நடவடிக்கைகளும் தொடரப்பட்டன. நீதிமன்றம் கலையும்வரை சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும், ரூ 75 அபராதத் தொகை செலுத்த வேண்டுமென்றும், தவறினால் 3 திங்கள் கால அளவு சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் பல்லடம் துணை மாஜிஸ்ட்ரேட் தீர்ப்புக் கூறினர்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, அப்படி கூட்டுறவுத் துறையில் தவறு செய்பவர்களுக்கு அபராதம் விதித்தும், அபராத கட்டணத்தை வசூலித்தும், அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் முறையிலும் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?